

வேலூர் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தம்பிமுகமது சாதிக் இயற்கை எய்தினார்.அவரது உடலுக்கு மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநில கொள்கை பரப்பு செயலாளர் காஞ்சிபுரம் எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய கழக செயலாளர் சி.எல்.ஞான சேகரன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

### வேலூர் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகியின் சகோதரர்

# வேலூர் முன்னாள் துணை மேயர் தி.அ.முகமதுசாதிக் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி மூலம் - முகம்மது சகிக்கு ஆறுதல்!

வேலூர், மே,11

வேலூர் மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி அவர்களின் தம்பியும், வேலூர் மாநகராட்சி முன்னாள் துணை மேயருமான தி.அ.முகமது சாதிக் நேற்று (10.05.2025-சனிக்கிழமை) நடந்த சாலை விபத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.



தகவல் அறிந்து துயருற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வேலூர் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி அவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

வேலூர் மாநகராட்சி முன்னாள் துணை மேயர் மறைந்த தி.அ. முகமது சாதிக் பாஷா, 35 வருடங்களாக வழக்கறிஞராகப் பணியாற்றியவர் . 25 வருடங்களாக ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றியவர். பொதுக்குழு உறுப்பினராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்டவர்.

வேலூர் மாநகர முதல் துணை மேயராகப் பணியாற்றியவர். தேர்தல் காலங்களில் தேர்தல் பொறுப்பாளராக,சிறப்பாக பணியாற்றியவர். கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டவர். முகமது சாதிக் அவர்களின் மறைவு, வேலூர் மாவட்டக் கழகத்திற்குப் பேரிழிப்பு எனின் அது மிகையல்ல!

மறைந்த தி.அ .முகமது சாதிக் அவர்களுக்கு மனைவி பஸ்நஜ்முன்னிசா, தி.ச. முகமது சித்தீக் அனீப், (பல் மருத்துவர்), எனும் மகனும் தி.ச. சாதியா ஜைனப், (எம்.பி .பி.எஸ். மருத்துவர்) எனும் மகளும் உள்ளனர்.

**அமைச்சர் ஆர்.காந்தி – கழகத்தினர் அஞ்சலி**

மறைந்த தி.அ.முகமது சாதிக் உடலுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப் பேட்டை ஆர்.காந்தி, அஞ்சலி செலுத்தினார்.

மேலும் வட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார்எம்எல்ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த்,மாநில கொள்கை பரப்பு செயலாளர் காஞ்சிபுரம் எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகரசெயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., திருவண்ணாமலை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் எ.வ.கம்பன், திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்எல்ஏ, நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல், ஆம்பூர் நகராட்சி தலைவர் ஏஜாஸ்அகமது,

மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், நகராட்சி தலைவர் சவுந்தரராஜன், துணை மேயர் எம். சுனில்குமார் , ஒன்றிய கழக செயலாளர்கள் சி. எல்.ஞான சேகரன், தணிகாசலம்,கே.கருணாகரன் மற்றும் கழக நிர்வாகி கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

### மாமதுரையில் மாபெரும் பொதுக்குழு கூட்டம்

# கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதல்படி ஏற்பாடுகள் தீவிரம்!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி நேரில் ஆய்வு

மதுரை, மே.11-

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மதுரையில் வரும் ஜூன் 1ஆம் தேதி கழகப் பொதுக் குழு கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி முத்தமிழ் கண்ட, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையாம் நான்மாடக்கூடலில் அமைந்திருக்கும் உத்தங்குடி கலைஞர் திடலில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாபெரும் பொதுகுழு நடைபெறுவதற்கான வேலைப்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இப்பணிகளை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் கொளுத்தும் வெயிலிலும் ஆய்வு செய்தார்.

இந்த பொதுக்குழு ஒரு வரலாறு படைக்கும் பொதுக்குழுவாகவும் இது போன்ற பொதுக்குழு இது வரை தமிழ்நாடு கண்டதில்லை, இனி இது போன்று காண்பதும் அரிது என்ற வகையில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

மாபெரும் திடலில் திடலை சீரமைக்கும் பணி பொதுக்குழு அரங்கம் அமைக்கும் பணி என பல்வேறு பணிகளில் புல்டோசர் கிரேன் போன்ற இயந்திரங்கள், தொழில்நுட்ப வல்லு னர்கள் மற்றும் தொழி லாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்

இதை தொடர்ந்து நாள்தோறும் பல்வேறு பணிகள் நடைபெற உள்ள நிலையில் ஒவ்வொரு பணிகளையும் கொளுத்தும் வெயிலிலும் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் இது தமக்கு கொடுத்த மிக முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பு எனக் கருதி செயல்பட்டு வருகிறார்

அமைச்சர் ஆய்வின் போது மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.வெங்கடேசன் எம்எல்ஏ, ஆசை கண்ணன், பொருளாளர் சோம சுந்தரபாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பி னர் கரு தியாகராஜன், ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன், மாவட்ட பிரதிநிதி அழகுபாண்டி, பகுதி செயலாளர் சசிக்குமார், மாமன்ற உறுப்பினர் துரைப்பாண்டி, வாடிப்பட்டி பேரூர் செயலாளர் மு.பால்பாண்டியன், மருத்துவரணி மகுடபதி மற்றும் கழக நிர்வாகிகள் கணேசன், ஜெய காந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சிவகங்கை மாவட்டம்-உ.சிறு வயலில் இன்று முப்பெரும் விழா!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் எஸ்.ரகுபதி- கோவி.செழியன்- மு.பெ.சாமிநாதன் - குன்றக்குடி அடிகளார் பங்கேற்பு

சிவகங்கை, மே 11-

சிவகங்கை மாவட்டம் உ.சிறுவயல் தமிழ் கழக நிறுவனர் பொதுச்செயலாளர் மக்கள் கவிஞர் அரு.நாகப்பன் கூறியுள்ளதாவது. சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா உ.சிறுவயல் தமிழ் கழகத்தின் 65 ஆவது ஆண்டு விழா மற்றும் கவியரசர் கண்ணதாசனின் 43வது ஆண்டு விழா தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டுவிழா விழாஆகிய முப்பெரும் விழா இன்று (11.05.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.00 மணி அளவில் உ.சிறுவயல் பொன்னழகி அம்மன் கலையரங்கில் நடைபெறுகிறது. ஓய்வு பெற்ற நீதிபதி மெ.சொக்கலிங்கம் தலைமையில் நடக்கும் விழாவில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், எஸ். ரகுபதி, கோவி.செழியன்,மு.பெ. சாமிநாதன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தமிழ் இலக்கியம் குறித்து சிறப்புரையாற்றுகிறார். விழாவில் திருக்குறள் ஒப்புவித்தல் தாலாட்டு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இலுப்பை குடிசொ. லெ.அழகப்ப செட்டியாருக்கு ஆன்மீகச் செம்மல் விருதினை அமைச்சர்கள் வழங்குகிறார்கள். நாளை தொடர்ந்து 12ஆம் தேதி திங்கட்கிழமை மாலை திருக்குறள் ஒப்புவித்தல் தாலாட்டுஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. தொடர்ந்து தேச மங்கையர்கரசி சிறப்புரையாற்றுகிறார். முப்பெரும் விழா ஏற்பாடுகளை தமிழ் கழக தலைவர் சின்ன அழகப்பன் சுப. சிங்காரம் மற்றும் விழா குழுவினர் செய்து வருகிறார்கள். இத்தகவலை கவிஞர் அரு.நாகப்பன் தெரிவித்துள்ளார்.



நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என்கிற தத்துவ தலைப்போடு தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருவாடனை சட்டமன்ற தொகுதி இராமநாதபுரம் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக சித்தார்கோட்டை ஊராட்சியில் சிறப்பாக நடைபெற்றது. இந்த சிறப்பான பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துரைத்து இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இந்நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் அனல் அய்யாசாமி சிறப்புரையாற்றினர் மற்றும் கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### சிலந்தி கட்டுரைகள்!

# ம.தி.மு.க... “சங்கொலி”யின் மதிப்பீடு!

நம் நினைவில் வாழும் முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாளில் முரசொலியில் ‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய 151 கட்டுரைகளை தொகுத்து, தி.மு.க. இளைஞர் அணி, முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடாக எழில் கொஞ்சும் நூலை வரலாற்று ஆவணமாக வெளியிட்டுள்ளது.

நூலின் உள்ளே, நுழை வாயிலில் இடம்பெற்றுள்ள புன்முறுவல் பூத்த முரசொலி செல்வம் அவர்களின் கம்பீரமான புகைப்படம், அவரை நேரில் பார்க்கும் உணர்வை நமக்கு அளிக்கிறது.

“‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய கட்டுரைகள் அன்று முதல் இன்று வரை நமக்கு மட்டுமல்ல, அரசியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் பாடமாக அமைந்தது. பொதுவாக சிலந்தி வலையைத் தொட்டால் அறுத்துவிடலாம்

**ஆனால் செல்வம் அண்ணனின் வாதங்கள் நைலான் நரம்பு வலை போலத்தான் இருக்கும்; யாராலும் மறுத்து அறுத்துவிட முடியாது. அந்த அளவிற்கு வலிமையான வாதங்களை வன்மையான எழுத்துக்களால் வைத்து வந்தார்.**

**அவர் எழுதிய இக்கட்டுரைகள் அவரைப் போலவே கம்பீரமானவை!**

**ஆறு ஆண்டுகால அரசியல் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பல்லாண்டு கால அரசியல் இதனுள் இருக்கிறது. சரியானதை அடையாளம் காட்டுகிறார். தவறானவர்களை அம்பலப் படுத்துகிறார்.**

கதை சொல்லும் பாணியில் எழுதி இருப்பதால் இவை படிக்கச் சுவையாகவும் இருக்கின்றன.

அவரதுஎழுத்துக்கள் எப்போதும் சூடானவை அதே நேரத்தில் சுவையானவை. அன்றாட அரசியலைத் தான் விமர்சிப்பார். அதே நேரத்தில் கடந்தகால அரசியலை நினைவூட்டுகிறார். குத்தல் இருக்கும். அதே நேரத்தில் யார் மனதையும் இரணப்படுத்தாது. எல்லோரும் அறிந்து கொள்ள அவரது கட்டுரைகளில் ஏராளமான தகவல்கள் நிறைந்து கிடக்கும்” என்ற தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு அரசின் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அருமையான அணிந்துரை, கரம் பிடித்து நூலின் உள்ளே வாசகர்களை அழைத்துச் செல்கின்றது. அணிந்துரையை அடுத்து, ‘முரசொலி செல்வம் வாழ்க்கைத்தடம்’ என்ற ஏழு பக்கங்கள் கொண்ட கட்டுரை, முரசொலி செல்வம் அவர்களின் வரலாறு, எழுத்தாற்றல், அடக்குமுறையை எதிர்கொண்ட அவருடைய துணிச்சல் ஆகியவைகளை படம் பிடித்துக் காட்டுகிறது.

முரசொலியில் 2019 ஆம் ஆண்டில் எழுதிய 32 கட்டுரைகள், 2020 ஆம் ஆண்டில் எழுதிய 17 கட்டுரைகள், 2021 ஆம் ஆண்டில் எழுதிய 13 கட்டுரைகள், 2022 ஆம் ஆண்டில் எழுதிய 36 கட்டுரைகள், 2023 ஆம் ஆண்டில் எழுதிய 27 கட்டுரைகள், 2024 ஆம் ஆண்டில் எழுதிய 25 கட்டுரைகள் ஆகியவைகள் தொகுக்கப்பட்டு, காலப்பெட்டகமாக, கருத்துக் கருவூலமாக இந்நூல் மின்னி மிளிர்கிறது! ஒவ்வொரு கட்டுரையிலும் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் நம்மை கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்கின்றன. வரலாற்று நிகழ்வுகள் திரைப் படக் காட்சிகளாய், நம் நெஞ்சில் மலர்ந்து மணம் வீசுகின்றன!

“முடியட்டும் மதவெறி! விடியட்டும் நல்லிணக்கம்! ‘புனைச் செய்திகளை பொடிப் பொடியாக்குவோம்!’ ‘நாணலாய் வளைகிறீர்களா? நாணயத்துக்கு வளைகிறீர்களா?’

‘காலத்தை வென்றவன் நீயே!’

‘கொக்கென்று நினைத்தாரோ தமிழக ஆளுநர் ரவி!’ ‘ரொட்டி இல்லையா? கேக் சாப்பிடுங்கள்!’ ‘ஊசியில் ஒட்டை என்று சல்லடை கேலி பேசுவதா?’



தென்றல் அல்ல நாங்கள்; புயல் என அறிவீர்! சாதிய, சதிகார அரசியலுக்கு சம்மட்டி அடி தாரீர்!” என நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் ஒவ்வொரு தலைப்புமே நம்மை சுண்டி இழுக்கின்றன; படிக்கத் தூண்டுகின்றன!

**திருவாரூர் புலிவலத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தின் சிறப்பில் தொடங்கி, துணை முதல்வரின் தி.மு.க. சின்னம் தொடர்பாக, அரசு விழாவில் காவி உடையில் வலம் வரும் உ.பி. முதல்வர்; அ.தி.மு.க. கரைவேட்டியுடன் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர்., எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர்களை அம்பலப்படுத்தும் சிலந்தியின் பதில் என நூலின் ஒவ்வொரு பக்கமும் கருத்து வளம் நிரம்பியவை.**

நூல் வெளிவர துணை நின்றோர் அனைவரையும் ‘சங்கொலி’ பாராட்டி வாழ்த்துகிறது! வரலாற்று ஆவணமாய்த் திகழும் சிலந்தி கட்டுரைகளை தமிழ் மக்கள் வாங்கிப் படித்து பரப்பிட முன்வர வேண்டும் என்று ‘சங்கொலி’ விழைகிறது!

**ஆ.வந்தியத்தேவன்**

–நன்றி ‘சங்கொலி’

9.5.2025

# திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் இல்ல திருமண விழா

## அமைச்சர்கள் இ.பெரியசாமி,அர. சக்கரபாணி – மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் வாழ்த்தினர்!

திண்டுக்கல், மே 11-

திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயரும், மாநகர கழக செயலாளருமான ச. ராஜப்பா விமலா தம்பதியின் மகன் என்ஜினீயர் ஜோவின் கார்முகிலன். இவருக்கும். பழனியைச் சேர்ந்த ராஜா விஜி தம்பதியின் மகள் அஸ்விந்தாவுக்கும் திருமணம் நிச்சயிக்கப் பட்டது.

இவர்களது திருமணம், திண்டுக்கல் புனித வளனார் பேராலயத்தில் நேற்று நடந்தது. மறைமாவட்ட ஆயர் தாமஸ்பால்சாமி தலைமையில் முதன்மை குரு சகாய ராஜ், திருப்பலி நடத்தப்பட்டு, திருமணம் நடைபெற்றது. இதையடுத்து திண்டுக்கல் ரவுண்டுரோடு பி.எஸ். என்.ஏ. மண்டபத்தில் திருமண வரவேற்பு விழா நடந்தது.

பின்பு நடந்த வரவேற்பு விழாவுக்கு கழக துணை பொதுச்செயலாள ரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமை தாங்கி, மணமக்களை வாழ்த்தி பேசினார். மேலும் மேற்கு மாவட்ட செயலாளரும், உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

விழாவில், முதலமைச்சர் அனுப்பிய திருமண வாழ்த்துச் செய்தியை, கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில் குமார் எம்.எல்.ஏ. வாசித்தார். பின்னர் முதல்அமைச்சரின் வாழ்த்து மடல் மணமக்களிடம் வழங்கப்பட்டது.

இதில், சச்சிதானந்தம் எம்.பி., காந்திராஜன் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால் உசேன்,மாநகராட்சி மேயர் இளமதி, மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் ராஜ்மோகன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன் வெள்ளிமலை பகுதி செயலாளர் ராஜேந்திர குமார் பஜ்லுல் ஹக், மாநகர துணை செயலாளர்கள் முகமது சித்திக், அழகர்சாமி, பொருளாளர் சரவணன்,

மாநகராட்சி மண்டல தலைவர் ஜான்பீட்டர் மற்றும் தி.மு.க. நிர்வாகி கள், கவுன்சிலர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

திருமண விழாவுக்கு வந்தவர்களை துணை மேயர் ராஜப்பா, மாநகர பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கால்டினஸ் இமானுவேல் ஆகியோர் நன்றி கூறினர்.

### திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை விளக்கிடும் வகையில்

# நாகர்கோவில் மாநகர கிழக்குப் பகுதி சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## மாவட்ட செயலாளர் மேயர் ரெ.மகேஷ் – செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் சிறப்புரையாற்றினர்!

கன்னியாகுமரி, மே 11-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் 4ஆண்டு சாதனைகளை விளக்கிடும் வகையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி சார்பில் நடைபெற்ற “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு” கழக அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டம் நாகர்கோவில் கோட்டார் ரயிலடி திடலில் நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் துரை தலைமையில் மாநகர செயலாளர் ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் மற்றும் தலைமை கழக பேச்சாளர் செந்தூர் ஜெ.பால கிருஷ்ணன் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநகர அவைத் தலைவர் பன்னீர் செல்வம், பகுதி செயலாளர்கள் ஜீவா, சேக்மீரான் உட்பட மாநகர நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், திமுக மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காரைக்குடியில் சிவகங்கை மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் நீர்மோர் பந்தலை, முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் துவக்கி வைத்தார். உடன் நகர தி.மு.க. அவைத் தலைவர் சன் சுப்பையா, நகர தி.மு.க. துணைச் செயலாளர் சோனா கண்ணன், மாவட்ட பிரதிநிதி சேவியர் மாமன்ற உறுப்பினர் துரை நாகராஜன், ஆர்.கே.பி.முனீஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.